Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 05 (21 - 09 - 1992) திங்கட்கிழமை ஓசை 216

## ஆசிரியர் பயிற்சி கலாசாலை 1993 ஆம் ஆண்டு அனுமதி

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 1993ற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இதற்கு விண்ணப்பிப்பது தொடர்பான விபரங்கள் ஆகஸ்ட் 21-ம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ் விபரங்களை விண்ணப்பதாரிகள் யாழ். கல்வித்திணைக்களத்தில் நேரில் பார்வையிடலாம் என பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் இதேவேளைமேற்படி பயிற்சி கலாசாலையின் 1992-ம் ஆண்டுக்கான இறுதி ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பணிப்பாளரால் எடுத்து வரப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிபர்கள் இவ் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க, பா)

# மேற்குலக நாடுகளின் சமாதான திட்டம்: செய்திகளுக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

## ஆதாரமற்றவை என அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மேற்குலக நாடுகள் தீர்வுத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாகவும் அதன் பிரதி விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் வெளிவந்த செயதிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது. "இந்தச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை" என விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளர் தெரிவித்தார்.

தமிழரின் இனப்பிரச்சினை சம்பந்தமாக மேற்குலக நாடுகள் தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன் பிரதிகளை சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பியிருப்பதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்கள் தமது செய்தி அறிக்கைகளில் தெரிவித்திருந்தன. அமெரிக்கா, சுவிட்சலாந்து. சுவீடன், நோர்வே, கனடா ஆகிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து இத் தீர்வுத் திட்டத்தை தயாரித்துள்ளதாகவும், இத்திட்டத்தின் பிரகாரம் விடுதலைப்புலிகளும், சிங்கள அரசும் உடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனவும், இப்பேச்சு வார்த்தையை மேறகுலக நாடு ஒன்றில் நடத்தலாமெனவும் செய்திகள் வெளியாகியிருந்தன இத்தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ்- பிராந்தியத் தளபதி கிருஷ்ணகுமார் கிட்டு யாழ்ப்பாணம் கொண்டு வந்து புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாக இச்செய்திகள் மேலும் தெரிவிததன.

இச்செய்திகள் குறித்து விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் "இச் செய்திகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை" என மறுப்புத் தெரிவித்தார்.

"இச் செய்தியில் குறிப்பிடப்பட்ட நாடுகள் கூட்டாகச் சேர்ந்து தீர்வுத் திட்டம் எதையும் தயாரித்ததாக எமக்கு

## பெறுமதிமிக்க உயிர்களும் வளங்களும் வீணடிப்பு

### - கத்தோலிக்க ஆயர் சபை கவலை

வடக்கு, கிழக்குப் பகுதியில் போர் காலஎல்லையற்று நீள்வதாகவும், இதனால் பெறுமதிமிக்க மனித உயிர்களும், வளங்களும் வீணடிக்கப்படுவதாகவும், கததோலிக்க ஆயர் சபை கவலை தெரிவிததுள்ளது. கொழும்பில் அண்மையில் கூடிய கததோலிக்க ஆயர்களின் சபை சமாதானததுக்கான ஆலோசனைத் திட்டமாக நான்கு விடயங்களையும் சுட்டிக்காட்டி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்அறிக்கையில் மேலும் தெரிவிககப்படடிருப்பதாவது:

எந்தவொரு அரசியல் கட்சியாவது இனப்பிரச்சினைக்கு நீடித்த அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்னும் ஆவல் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இதற்கான பொறுப்பை எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்க

## பலவந்தமாக அனுப்புவதாக 45 அகதிகள் புகார்

(டில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பும் இந்திய அரசின் நடவடிக்கையில் ஐககிய நாடுகள் உயர் கிடைத்திருப்பதாகவும், எனினும் அகதிகளை திருப்பி அனுப்பும் பணி சுமுகமாக நடைபெறுவதாகவும் புதுடில்லி ஐக்கிய நாடுகள் உயர்

## திலீபன் நினைவுநிகழ்வுகளில் மக்கள் தீவிர பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாள்தோறும் புதுப்பொலிவு பெற்றுவருகின்றன.

தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகளின் ஆறாவது நாளான நேற்றும் புதிது புதிதாக அலங்காரங்களும், நினைவுப் பந்தல்களும் அமைக்கப்படடுக்கொண்டிருந்தன. சில நினைவுப் பந்தல்கள் மின்அலங்காரம் செய்யப்பட்டுக் காணப்பட்டன.

சுழற்சிமுறையில் வட்டரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உண்ணா விரத நிகழ்வுகளில் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

சிரமதானப் பணிகளிலும் மற்றும் பொதுப்பணிகளிலும் மக்கள் ஆர்வமுடன் பெருமளவில் பங்குபற்றி வருகின்றனர்.

வீடுகள், வீதிகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள திலீபன் நினைவுப் பந்தல்களில் அகல் விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. இரவு நெடுநேரம் அணையாது ஒளி வீசும் அகல் விளக்குகள் இப்பந்தல்களில் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன.

## தியாகி திலீபன் நினைவு இன்றைய சிரமதான பணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வின் ஓர் அங்கமாக இடம்பெற்று வரும் சிரமதானப் பணிகளில் இன்று நடைபெறவுள்ள பணிகளின் விபரம் வருமாறு:

புகையிரத நிலையத்தில் வசிக்கும் மக்களால் அப்பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நல்லூர் வட்டவைப் பிரிவில் நந்தாவில் வாய்க்கால் துப்புரவு செய்யப்படும் இந்த வாய்க்கால் கொக்குவில் சந்தியிலிருந்து ஆரம்பித்து 1000 மீற்றர் தூரததிலுள்ள நந்தாவில் குளத்தில் சென்று முடிவடைகிறது.

சங்கானை வட்டவைப் பிரிவில் வட்டுக்கோட்டை வீதியின் பெரிய பள்ளங்களுக்கு மக்கிபோடப்படும்.

பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் கலைஞர் வட்ட ஆதரவில் பருத்தித்துறை ஐயனார் கலட்டி மக்களால் ஐயனார் கலட்டி வீதி துப்புரவு செய்யப்படும்.

கரவெட்டி வட்டவைப் பிரிவில் கணித தனியார் கல்வி நிலைய ஆதரவில் நெல்லியடி மக்களால்நெல்லியடிமகாத்மா வீதி துப்புரவு செய்யப்படும்.

### சிறுபான்மையினர் உரிமை மறுக்கப்பட்டால்

## உலகம் 400 நாடுகளாக பிளவுபடுவது தவிர்க்கமுடியாதது

ளை தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன் பிரதிகளை சிறிலங்கா அரசுக்கும் விடுத

செய்தி ஸ்தாபனங்கள் தமது செய்தி அறிக்கைகளில் தெரிவித்திருந்தன. அமெரிக்கா,

கள் கூட்டாகச் சேர்ந்து இத் தீர்வுத் திட்டத்தை தயாரித்துள்ளதாகவும், இத்திட்டத்

யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனவும், இப்பேச்சு வார்த்தையை மேற்குலக நாடு ஒன்றில் நடத்தலாமெனவும் செய்திகள் வெளியாகியிருந்தன. இத்தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ்- பிராந்தியத் தளபதி கிருஷ்ணகுமார் கிட்டு யாழ்ப்பாணம் கொண்டு வந்து புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாக இச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

இச் செய்திகள் குறித்து விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் ''இச் செய்திகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை'' என மறுப்புத் தெரிவித்தார்.

''இச் செய்தியில் குறிப்பிடப்பட்ட நாடுகள் கூட்டாகச் சேர்ந்து தீர்வுத் திட்டம் எதையும் தயாரித்ததாக எமக்கு தகவல் இல்லை. அப்படியான திட்டம் எதுவும் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை'' என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் யாழ்- பிராந்திய தளபதி கிட்டு யாழ்ப்பாணம் வந்திருப்பதாக வெளியான செய்திளும் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பெறுமதிமிக்க உயிர்களும் வளங்களும் வீணடிப்பு

## - கத்தோலிக்க ஆயர் சபை கவலை

வடக்கு, கிழக்குப் பகுதியில் போர் காலஎல்லையற்று நீள்வதாகவும், இதனால் பெறுமதிமிக்க மனித உயிர்களும், வளங்களும் வீணடிக்கப்படுவதாகவும், கததோலிக்க ஆயர் சபை கவலை தெரிவிததுள்ளது. கொழும்பில் அண்மையில் கூடிய கததோலிக்க ஆயர்களின் சபை சமாதானததுக்கான ஆலோசனைத் திட்டமாக நான்கு விடயங்களையும் சுட்டிக்காட்டி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அவ்அறிக்கையில் மேலும் தெரிவிககப்படடிருப்பதாவது:

எந்தவொரு அரசியல் கட்சியாவது இனப்பிரச்சினைக்கு நீடித்த அரசியல் தீர்வொன்றை காணவேண்டும் என்னும் ஆவல் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இதற்கான பொறுப்பை எல்லா அரசியல் கடசிகளின் தலைவர்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும். எவர் ஒருவராவது தமது குறிகிய நலன்களை விட்டுக் கொடுத்து தேசத்தின் பரந்துபட்ட நலனுக்காக சிந்திபபதாகத் தெரியவில்லை. உண்மையான தேசப்பற்று என்பதை எந்தக் கட்சிகளிடமும் காண முடியவில்லை. எதிர்க் கட்சிகளும சரி, அரசும் சரி எரியும் பிரச்சினைகளுக்காக ஒருவர் மீது மற்றவர் குற்றம் சாடடிக்கொண்டு குறுகிய அரசியல் லாபம் தேட முயற்சிக்கிறார்களேயன்றி தீர்வைத் தேடுபவர்களாக இல்லாமல் இருக்கிறார்கள். இன்னும் மேலே சிலர் பேரினவாதத்திற்கு ஊககம் கொடுப்பவர்களாக உள்ளனர். எந்தவொரு அரசியல் வாதியாவது தேசத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலவந்தமாக அனுப்புவதாக 45 அகதிகள் புகார்

(டில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பும் இந்திய அரசின் நடவடிக்கையில ஐககிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் தலையிட்ட பின்னர் பலவந்தமாக நாடு கடத்தப்படுவதாகக் கூறும் பதினைந்து புகார்கள் தெரிவிக்கப்படடுள்ளன.

ஆகஸ்ட் மூன்றாம் திகதிக்குப் பின்னர் நாறபத்தைந்து பேர் சம்பந்தப்பட்ட பதினைந்து புகார்கள் தமக்கு கிடைத்திருப்பதாகவும், எனினும் அகதிகளை திருப்பி அனுப்பும் பணி சுமுகமாக நடைபெறுவதாகவும் புது டில்லி ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரி பவுகல் கரிம் கூறியுள்ளார்.

இதேவேளை அகதிகளை திருப்பி அனுப்பும் பணியில் விமானம் ஈடுபடுத்தப்படுவது செலவைக் கூட்டியிருப்பதால் விமானம் மூலம் அனுப்புவது இடை நிறுததப்பட்டிருப்பதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குடியேற்றங்கள் குறித்து அமைச்சரின் புதிய விளக்கம்

(கொழும்பு)

அண்மைக்காலததில் அரச உதவியுடனான சிங்களக் குடியேற்றங்கள் எதுவும் நிகழ்த்தபபடவில்லை என்று அமைச்சரவைப பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் சிங்களக் குடியேற்றம் பற்றிக் கேட்டதற்கு அவர் இவ்விதம் பதிலளித்தார்.

தொடர்ந்து அண்மைக் காலம் என்று எதைக் கருதுகிறீர்கள் எனக் கேடடபோது 1990 ஜூனுக்குப்பிறகு

(4 ஆம் பககம் பார்க்க)

# உணவு லொறிகள் மீது ராணுவம் புதிய கெடுபிடிகள்

(வவுனியா)

வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் செல்லும் லொறிகள் மீதான சோதனை நடவடிக்கைகள் இப்போ மிகவும தீவிரப்படுததப்பட்டுள்ளன என்று லொறி உரிமையாளர்களும், ப.நோ.கூ.சங்க அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

சோதனைகள் மிகவும் அதிகமாக உள்ளதால் வடபகுதிக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் தாமதமும், தடங்கலும் ஏற்படுகின்றன

சோதனை நிலையத்தில் லொறிகளின் பற்றரிகள் அகற்றப்படுகின்றன. கிளிநொச்சி வரையான மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம் வரை லொறிகள் சென்று திரும்புவதற்கான டீசல் மாத்திரமே லொறியின் கொள்கலனில் நிரபபப்பட்டிருக்க வேண்டும் என்ற உத்தரவும் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களிலிருந்து குடாநாடு நோக்கி வரும் லொறிகள் மாத்திரமன்றி, வவுனியாவிலிருந்து பொருள்களை ஏற்றிவரும் லொறிகளும் தென்பகுதி நோக்கி மதவாச்சியைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)


இன்று

மங்களகரமான ஆரம்பம்

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி எமது கிளை

சுகுணாஸ் புடைவை மாளிகை

இல. 29, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் இன்றுமுதல் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

சுகுணாஸ் புடைவை மாளிகை

2C, அர்ச்சனா வீதி, (ஸ்ரான்லி) யாழ்ப்பாணம் [3252]


# சிறிமாவோ பின்னடிப்பு

(கொழும்பு)

களுத்துறை மாவட்ட எம்.பியும, ஹெல உறுமய குழுவின் பொதுச்செயலாளருமான திலக் கருணாரத்னாவை கட்சியிலிருந்து இடை நீக்கும் முயற்சியிலிருந்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பின்வாங்குவதாக தெரியவருகின்றது.

அவரது இடைநீக்க முயற்சியை கடசியின் தேசிய அமைப்பாளர் அநுரா பண்டாரநாயக்கா உட்பட ஹெல உறுமய குழு எதிர்த்து வருவதாகத் தெரியவருகிறது.

### காயமடைந்தவர் மரணம்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தின் எறிகணை வீச்சில் காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் மரணமானார்.

கடந்த 17ஆம் திகதி வவுனியா நகரப் பகுதி நோக்கிச் சென்றவரே எறிகணை வீச்சில் காயமடைந்திருந்தார்.

வைரமுத்து சிறிஸ்கந்தராசா என்ற இந்தக் குடும்பஸ்தர் நாவற்குளம் பகுதியைச் சேர்ந்தவர். இவர் 18ஆம் திகதி வைத்தியசாலையில் இறந்தார்.

நிகழ்வுகளின் ஆறாவது நாளான நேற்றும் புதிது புதிதாக அலங்காரங்களும், நினைவுப் பந்தல்களும் அமைக்கப் படடுக்கொண்டிருந்தன. சில நினைவுப் பந்தல்கள் மின்அலங்காரம் செய்யப்பட்டுக் காணப் பட்டன.

சுழற்சிமுறையில் வட்டரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள உண்ணா விரத நிகழ்வுகளில் பங்குபற்றும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

சிரமதானப் பணிகளிலும் மற்றும் பொதுப்பணிகளிலும் மக்கள் ஆர்வமுடன் பெருமளவில் பங்குபற்றி வருகின்றனர்.

# இன்றைய சிரமதான பணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வின் ஓர் அங்கமாக இடம்பெற்று வரும் சிரமதானப் பணிகளில் இன்று நடைபெறவுள்ள பணிகளின் விபரம் வருமாறு:

புகையிரத நிலையத்தில் வசிக்கும் மக்களால் அப்பகுதியில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

நல்லூர் வட்டவைப் பிரிவில் நந்தாவில் வாய்க்கால் துப்புரவு செய்யப்படும். இந்த வாய்க்கால் கொக்குவில் சந்தியிலிருந்து ஆரம்பித்து 1000 மீற்றர் தூரததிலுள்ள நந்தாவில் குளத்தில் சென்று முடிவடைகிறது.

சங்கானை வட்டவைப் பிரிவில் வட்டுக்கோட்டை வீதியின் பெரிய பள்ளங்களுக்கு மக்கிபோடப்படும்.

பருத்தித்துறை வட்டவைப் பிரிவில் கலைஞர் வட்ட ஆதரவில் பருத்தித்துறை ஐயனார் கலட்டி மக்களால் ஐயனார் கலட்டி வீதி துப்புரவு செய்யப்படும்.

கரவெட்டி வட்டவைப் பிரிவில் கணித தனியார் கல்வி நிலைய ஆதரவில் நெல்லியடி மக்களால்நெல்லியடிமகாத்மா வீதி துப்புரவு செய்யப்படும்.

## சிறுபான்மையினர் உரிமை மறுக்கப்பட்டால்

# உலகம் 400 நாடுகளாக பிளவுறுவது தவிர்க்கமுடியாது

## -பூட்ரஸ்காலி எச்சரிக்கை

(வாஷிங்டன்)

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளில் சர்வதேசச் சமூகங்கள் முக்கிய கவனம் செலுத்தாவிட்டால் இந்த உலகம் பொருளாதார ரீதியில் வலுவற்ற நானூறு சிறிய நாடுகளாகப் பிளவுபடுத்தப்படும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி தெரிவித்தார்.

யூகோஸ்லாவாக்கியா பிளவுபட்டுள்ளதும் அடுத்த நூற்றாண்டில் வேறு சில நாடுகளுக்கு முன்மாதிரியாக விளங்கக் கூடும் என்று அவர் கவலை தெரிவித்தார்.

அடுத்த பத்தாண்டுகளில் நாடுகள் இவ்வாறு பிளவுபடக் கூடிய ஆபத்துக்கள் தோன்றக் கூடும் என்றும் இதனால் கூடுதலான எல்லைப் பிரச்சினைகள் தோன்றுவதுடன் பொருளாதார அபிவிருத்தியும் முற்றாகத் தடைப்படும். இந்த நிலைமையை தவிர்க்கவேண்டுமானால் சிறுபான்மை மக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தாண்டிக்குளத்தில்

# புலிகளின் தாக்குதலுக்கு பொறுப்பதிகாரி பலி

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது சிறிலங்கா இராணுவத்தின் தாண்டிக் குளம் சோதனை முகாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 'சதுரங்க' நடவடிக்கையில் செக். டாங்கிகள்

(கொழும்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் படையினர் நடத்திய சதுரங்க இராணுவ நடவடிக்கையின் போது செக்கோஸ்லவாக்கிய டாங்கிகளும் பயன்படுத்தப் பட்டன என்றும், அது முன்னர் பயன்படுததப்பட்ட சீனத் தயாரிப்பு டாங்கிகளை விட பயன் மிகுந்ததாக இருந்தது என்றும் சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

யானை, குதிரை, தேர் என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நிர்ப்பந்தம் பிரயோகிப்பதே நடவடிக்கை நோக்கமாம்

இராணுவ ரீதியாகப் புலிகள் மீது நிர்ப்பந்தத்தை பிரயோகிப்பதே தமது இப்போதைய நடவடிக்கையின் நோக்கமாகும் என்று மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் இராணுவத்தினர் உறுதியாகவும், கட்டுககோப்புடனும் தற்போது யுத்தநடவடிக்கைகளை மேற்கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய தொழிற் சட்டம் தொழிற் சங்கங்கள் கண்டனம்

(கொழும்பு)

பதினைந்து வருட கால ஐ.தே. கட்சி ஆட்சியில் தொழிலாளருக்கு வந்த சட்டங்களில் மிகவும் கொடூரமான சனநாயக விரோதமான சட்டம் தற்போது வர்த்தமானி மூலம் வெளிவந்துள்ளது.

உற்பத்தித் தொழிற்சாலைகளின் உற்பத்தியைப் பாதிக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக இருபதுவருட சிறை தண்டனையை வழங்கும் அதிகாரத்தை அச்சட்டம் கொண்டுள்ளது.

இதனால் தொழிலாளர் நலன், பேச்சுச்சுதந்திரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**குளங்களைத்திருத்துவோம் வளங்களை பெருக்குவோம்**

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (இ-5070)

### ஆதாரம் காட்டிப் பெறவும்

வவுனியா சோதனைச் சாவடிக் கண்மையில் கடந்தமாதம் ஒரு மணிக்கூடும் இம்மாதம் மோதிரம் ஒன்றும் மனோகரன் எனும் பெயரிடப்பட்டு பல பொருள்கள் அடங்கிய பாக் ஒன்றும் இவைதவிர இன்னு மோர் பொருள்களடங்கிய பிறவுண் பாக்கும் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களை காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### பதிவாளர்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் தற்பொழுது 12 பிறப்பு, இறப்புப் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது.

இதுவரை மேற்படி பிரிவில் நான்கு பிறப்பு, இறப்பு பதிவாளர்களே இருந்தனர். கடந்தபுதன்கிழமை வேலணை உதவி அரச அதிபர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி பிறப்பு, இறப்பு பதிவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரியவருகின்றது. (பா)

### உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கு கடந்த மாதத்திற்கான நாலுகட்ட நிவாரண விநியோகமும் நிறுத்தப்படுகிறது என்றும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் இந்த மாதத்திற்கான இரண்டு கட்ட உலர் உணவு விநியோகம் நடைபெறும் என்றும்

# தமிழீழம் மலர்ந்துவிட்டது; மருத்துவிச்சி வேலைதான் தேவை

## வாழ்வுரிமை மாநாட்டில் பண்ருட்டி ராமச்சந்திரன்

(சென்னை)

''செக்கோஸ்லாவியா என்றவொரு சிறிய நாடு. இன்றைக்கு இந்த நாடு செக் மற்றும் ஸ்லாவியா என்று தனித் தனி நாடாகப் பிரிந்திருக்கின்றது. தனித் தமிழ் ஈழத்தை இன்றைக்கு உலகமே ஒத்துக் கொண்டிருக்கிறது. தமிழீழத்தைப் பெற்றுத்தர வேண்டும் என்று நாங்கள் இந்திய அரசை வற்புறுத்தவில்லை. ஈழம் மலர்ந்து விட்டது. அதற்கு மருத்துவிச்சி வேலையைச் செய்யுங்கள் என்றுதான் சொல்கிறோம்''.

இவ்வாறு அண்மையில் சென்னையில் நடைபெற்ற தமிழர் வாழ்வுரிமை மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன் குறிப்பிட்டார். அந்த மாநாட்டில் தொடர்து பேசிய அவர்;

தமிழனுக்குத் தன்னுரிமை கேட்பது பிரிவினை அல்ல. மாநாட்டில் திரண்டிருப்பவர்கள் கூலிக்கு அழைத்து வரப்பட்ட கூட்டம் அல்ல. கட்டுச் சோற்றுடன் தண்ணீரும் கொண்டு சொந்தச் செலவில் வந்தவர்கள். ஜெயலலிதா புண்ணியம் கட்டிக் கொண்டார். பாட்டாளி மக்கள்கட்சிமாநாடு நடக்கிறது. தனியார் பஸ் உரிமையாளர்கள் யாரும் பஸ்களை தர வேண்டாம் என்று உத்தர விட்டார். இல்லையென்றால் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக இன்னும் நிறைய வாகனங்களில் பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் வந்திருப்பார்கள்.

இந்த மாநாட்டை நடத்த விடாமல் தடுக்கடெல்லிக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியவர்களும் உண்டு. மழை பெய்யாதா அப்படியாவது மாநாடு நடைபெறாமல் போகாதா என்று நினைத்தவர்கள் உண்டு. வகுப்புக் கலவரம் தொடராதா என்று ஏங்கியவர்களும் உண்டு.

இந்த மாநாடு அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனை வகுப்பு வாதத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சி பிரதிநிதித்துவம் வகிக்கிறது. இதுவொரு வன்முறைக்கட்சி என்று இட்டுக்கட்டி இழித்துப் பேசுகிறவர்கள் மத்தியில் முகிழ்ந்து வரும் முழு நிலவாக இன்று இந்த மாநாடு திகழ்கின்றது.

இம்மாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேற்றப்போகிறார்கள் என்று இந்திய அரசே கண்ணில் விளக்கெண்ணை ஊற்றிக்கொண்டு கவனமாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

இங்கு மாநிலத்தில் உள்ள அரசு ஓர் அரசா. இந்த அரசாங்கததை நாங்கள் அங்கீகரிக்கவில்லை விடுதலைப்புலிகளை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று இங்குள்ள அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு சொல்கிறார்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் ஒரே இயக்கம் பாட்டாளி மக்கள் கட்சி இயக்கம் தான்.

1 தமிழீழம்மலர்ந்தால்ராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்களுக்கு ஏன் கவலை வரப் போகிறது. அங்கே தமிழ்ஈழம் என்றால்கடலும் தமிழ்க்கடல் ஆகிவிடும் மீனவர்களும் அமைதியாக இருப்பார்கள் இதைச் சொன்னால் என்ன தப்பு சோவியத் ரஷ்யாவில் ஒன்றாக இருந்த பதினைந்து நாடுகள் இப்போது தனித் தனியாக பிரிந்து விட்டன. திருமணத்திற்குப்பிறகு தனித் தனியாகப் பிரிந்து போன சகோதரர்கள் தங்கைக்கு கல்யாணம் செய்யும்போது மட்டும் அத்தனைபேரும் ஒன்றாகக் கலந்து விடுகிறார்கள் அது போலத்தான் தமிழனுக்கு தன்னுரிமை கேட்கிறோம் சரியெனப்பட்டதை நியாயம் என்று தோன்றியதை நேர்மை என்று செரிந்ததை சத்தியத்தை உணர்ந்து செய்வதற்கு பாட்டாளி மக்கள் கட்சி தயங்கியதில்லை இவ்வாறு நாங்கள் கேட்டால் தடாவில் தூக்கிப் போடுவோம் என்று மிரட்டுகிறார்கள்.

39 நாடுகளில் தமிழன் வாழ்கிறான் நாம் நடத்துகிற இது போன்ற மா நாடுதான் அவர்களுடைய மனப் புண்ணுக்கு ஆறுதல் அதுதான் ஆறுதல் மருந்து.

உலகத் தமிழர் அநாதைகள் அல்ல, ஆதரவற்றவர்கள் அல்ல வேர் அற்ற மரம் அல்ல அவர்களுக்கு உற்ற துணைவர்களாக தமிழகத்தில் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்த்தத்தான் இந்த மாநாடு.

இந்த மா நாடு நமக்கு ஒரு மிகப் பெரிய திருப்புமுனை நாம் தொடங்கியிருப்பது பெரிய திட்டம் நமக்குரிய உரிமையை நாம் அனுபவிக்க வேண்டும் பிறர் கொடுத்து நாம் வாங்குவது அல்ல உரிமை என்று தமதுரையில் ராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

யாழ்' மாவட்ட பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்ட போட்டிகள்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயானகோட்டமட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகளில் மருதனார்மடம்கோட்டத்தில் இன்று இடம் பெறும் போட்டிகள் வருமாறு;

உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் உடுவில் மான்ஸ் மத்திய வித்தியாலயம் எதிர் தமிழ் கந்தையா வித்தியாலயம் மாலை 4.10 மணிக்கு இணுவில் சைவ மகாஜனா எதிர்மெமோறியல் ஆங்கில பாடசாலை.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயம் எதிர் ஊரெழு கணேசா மாலை 4.10 மணிக்கு 19 வயது பீ பிரிவில் ஊரெழு கணேசா வித்தியாலயம் எதிர் உரும்பராய் இந்துக்கல்லூரி.

யாழ். கல்விக்கோட்டத்தில் இன்று இடம் பெறவுள்ள போட்டிகள் வருமாறு:

யாழ் பரியோவான் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.15 மணிக்கு 17 வயது பிரிவில் மத்திய கல்லூரி எதிர் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் பிற்பகல் 4.30 மணிக்கு 17 வயது பிரிவில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் எதிர் புனித யோசப் வித்தியாலயம்

## ஏழாம் நாள் (21-9-92)

உதடு கருகி ... உடல் சுருங்கி—உருக
சிதையில் எழுவதுபோல் சோகத் தீ பெருக...
கதை கதையாய்ப் பேசியெமை மகிழ்வித்த
காவியத் திலீபனது நாவெடித்துக் கிடந்ததம்மா!

பாசமகன் இங்கே படுக்கையில் கிடக்க
பலாலியில் இந்தியக்குழு பேச்சினைத் தொடுக்க
தேசத்தின் சொத்தான பனைகளெல்லாம்
நேசமகன் நிலைகண்டு அழுததம்மா!

வாழைபலா வேம்பு மரவள்ளி தென்னையுடன்
ஆலை.. அரசு அறுகம்புல் கூட அழுததம்மா !
தோளை நிமிர்த்திச் சிலிர்க்கின்ற தேக்கமரம்
தன் கிளையைத் தாழ்த்தித் துடித்ததம்மா !

வானம் இடி இடிக்க ... வான் மேகம் தான் குமுற ...
தேனமுதக் கானம்' இசைக்கின்ற தேன் குயிலும்'
தானழுது தன் துயரைப் பாட்டில் வெளிக்கொணர ...
மானமகன் விழியிரண்டும் குழிவிழுந்து ...மறைந்ததம்மா!

ஆளை விழுங்கும் .... அழகான இரு நீள ...
விழியிருந்த இடத்தில் குழிவிழுந்த பின்னும்
வேழமது தனுணர்வை இழக்கவில்லை; மக்கள்
வாழவொரு வழிகாண மறககவில்லை !

கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன்

## யானைகளை சுட்டுக்கொன்ற ஊர்காவல்படை கைது

(கொழும்பு)

தந்தங்களையுடைய நான்கு காட்டு யானைகளை சுட்டுக் கொன்றதாக ஊர்காவல் படையைச் சேர்ந்த ஆறுபேர் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின்படி சோமாவதிய தேசிய பூங்காக் காட்டுப் பகுதியை சேர்ந்த கறுப்பளை, குடா பொக்கணை காடுகளின் வெவ்வேறு இடங்களில் இந்த நான்கு காட்டு யானைகளும் சுடப்பட்டுள்ளன.

ரைபிள் சூட்டுக் காயங்களுடன் இறந்து காணப்பட்ட இந்த யானைகளிலிருந்து தந்தங்கள் பெயர்த்து எடுக்கப் பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கைதான ஊர்காவல் படையைச்சேர்ந்த ஆறுபேரும் முஸ்லிம்கள் ஆவர்.

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான மீள் அனுமதிச்சீட்டுக்கள் சில க. குலசிங்கம் என்பவரினால் நல்லூர் தபால் கந்தோர் முன்பாகக் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

எம்பிலிப்பிட்டிய

## மாணவர்கள் கொலைக்கு அதிபரே சூத்திரதாரி

எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலயத்தின் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வில் தொடர்புடையோரின் பெயர் விபரங்கள் மனித உரிமைகள் செயலணிக் குழு வெளியிட்டுள்ளது. இப்படுகொலைகளின் சூத்திரதாரி அப்பாடசாலையின் அதிபரான தயானந்த லொகுகல எனவும் தெரிய வருகின்றது.

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி பதவியேற்ற போது தயானந்த லொகுகல உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் இவர் அப்பாடசாலையின் முன்னைய அதிபருக்கு எதிராக மாணவர்களைத் தூண்டி விட்டார். இதனால் அந்தஅதிபர் பாட

கொண்டார். தொடர்ந்து முன்னர் தான் தூண்டிவிட்ட மாணவர்களை பின்னர் தன்னாலேயே கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகுவதைக் கண்டார். அந்த மாணவர்களில் இருவரை இராணுவத்தினர் மூலம் கைது செய்வித்தார். பின்னர் மாணவர்கள் கொலை செய்யப்பட்டனர். இதில் கேணல் ஆர் சி லியனகே உட்பட மேலும் மூன்று அதிகாரிகளும் 8 சிப்பாய்களும் சம்பந்தப்பட்டுள்ளதாயும் இவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலய மாண

## எம் உணர்வுகளில் உன் நினைவுகள்

எங்கள் விடுதலைப் பாதையில்
விழிமூடா
நெடுதூர பயணமதில்
இடை நடுவில்
உறைந்து போன
எம் உயிர்த்தோழனே!

உன் நினைவுகளை
எம் உணர்வுகளில்
மீட்டிக் கொண்டு...
உன் பாதச் சுவடுகளை
ஈழ மண்ணின் வீதியோரங்களிலெல்லாம்
தேடிக்கொண்டு...

வாளர்களே இருந்தனர். கடந்தபுதன்கிழமை வேலணை உதவி அரச அதிபர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி பிறப்பு, இறப்பு பதிவாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என தெரியவருகின்றது. (பா)

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கு கடந்த மாதத்திற்கான நாலு கட்ட நிவாரண விநியோகமும் நிறுத்தப்படுகிறது என்றும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் இந்த மாதத்திற்கான இரண்டு கட்ட உலர் உணவு விநியோகம் நடைபெறும் என்றும் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## மரக்கன்று விநியோகம்

லெப். கேணல் தியாகி திலீபனின் 5-ம் ஆண்டுநிறைவுஞாபகார்த்தமாக 1000 மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தீர்மானித்துள்ளது.

தியாகி திலீபனின் தற்கொடையை நினைவு கூரும் அதேவேளை எமது குடாநாட்டில் மரநடுகையை ஊக்குவிக்குமுகமாகவும் இப்பணியை செய்ய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

இம் மரக்கன்றுகள் நேற்று காலை 10-00 மணி முதல் வழங்கப்படுகிறது. கன்றுகளை பெறவிரும்புவோர் காங்கேசன்துறை வீதியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## யானைகளைச் சுட்டுக்கொன்ற ஊர்காவல்படை கைது

(கொழும்பு)

தந்தங்களையுடைய நான்கு காட்டு யானைகளை சுட்டுக்கொன்றதாக ஊர்காவல் படையைச் சேர்ந்த ஆறுபேர் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின்படி சோமாவதிய தேசிய பூங்காக் காட்டுப் பகுதியை சேர்ந்த கறுப்பளை, குடாபொக்கணை காடுகளின் வெவ்வேறு இடங்களில் இந்த நான்கு காட்டு யானைகளும் சுடப்பட்டுள்ளன.

றைபிள் சூட்டுக் காயங்களுடன் இறந்து காணப்பட்ட இந்த யானைகளிலிருந்து தந்தங்கள் பெயர்த்து எடுக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கைதான ஊர்காவல் படையைச்சேர்ந்த ஆறுபேரும் முஸ்லிம்கள் ஆவர்.

---

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான மீள் அனுமதிச்சீட்டுக்கள் சில க. குலசிங்கம் என்பவரினால் நல்லூர் தபால் கந்தோர் முன்பாகக் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

## மூன்று மாத காலமாக சம்பளம்வழங்கப்படவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் கடமை புரியும் கடற்றொழில் திணைக்கள ஊழியர்கள் 18 பேருக்கும் கடந்த மூன்றுமாத காலமாக சம்பளங்கள் வழங்கப்படவில்லைஎனத்தெரியவருகிறது.

இது குறித்து இந்த ஊழியர்கள் யாழ். அரச அதிபருக்கு முறையிட்டுள்ளனர். இதே போன்று,

1990 ஆம் ஆண்டிலும் கடற்றொழில் திணைக்கள ஊழியர்களுக்கு சம்பளம்வழங்கப்படாமல் இருந்தபோது அவர்களுக்கு முற்பணம் வழங்குவதற்காக யாழ். செயலக நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவை யாழ் அரச அதிபர் வழங்கியிருந்தார்.

ஆனால் அந்தப் பணம் இன்னமும் யாழ். செயலகத்துக்கு மீளளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில்,

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் பற்றிய விவரங்கள் அவர்களது உபகரணங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆகியன குறித்து இதுவரை மதிப்பீடுகள் செய்யப்படவில்லை என்று,

கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர்களின் அக்கறையற்ற இப் போக்கினால் வடக்கில் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் தமது இழப்புக்களுக்கு நஷ்ட ஈடு கோர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (42)

## மாணவர்கள் கொலைக்கு அதிபரே சூத்திரதாரி

எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலயத்தின் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வில் தொடர்புடையோரின் பெயர் விபரங்கள் மனித உரிமைகள் செயலணிக் குழு வெளியிட்டுள்ளது. இப் படுகொலைகளின் சூத்திரதாரி அப்பாடசாலையின் அதிபரான தயானந்த லொகுகல எனவும் தெரிய வருகின்றது.

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி பதவியேற்ற போது தயானந்த லொகுகல உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்னர் இவர் அப் பாடசாலையின் முன்னைய அதிபருக்கு எதிராக மாணவர்களைத் தூண்டி விட்டார். இதனால் அந்தஅதிபர் பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டார்.

பின்னர் அதிபர் பதவியை தயானந்த லொகுகல பெற்றுக் கொண்டார். தொடர்ந்து முன்னர் தான் தூண்டிவிட்ட மாணவர்களை பின்னர் தன்னாலேயே கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகுவதைக் கண்டார். அந்த மாணவர்களில் இருவரை இராணுவத்தினர் மூலம் கைது செய்வித்தார். பின்னர் மாணவர்கள் கொலை செய்யப்பட்டனர். இதில் கேணல் ஆர் சி லியனகே உட்பட மேலும் மூன்று அதிகாரிகளும் 8 சிப்பாய்களும் சம்பந்தப்பட்டுள்ளதாயும் இவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை எம்பிலிப்பிட்டிய மகாவித்தியாலய மாணவர்கள் 31 பேர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## அரசியல் கட்சிகளிடையே வர்க்கபேதம் நிலவுகிறது

— பிரேமதாசா

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் வர்க்க பேதம் தாண்டவமாடுவதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கேகாலையில் இடம் பெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் சிறிமாவோவின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டிருந்த காலத்திலும்கூட கட்சியின் தலைமைப் பதவியை வேறொருவரிடமும் அவர் கொடுக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## மேலதிகபடி வழங்குமாறு ஓய்வூதியர் வழிபாடு

(குருநாகல்)

குருநாகல் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர் 260 ரூபா மாதாந்தப் படியை வழங்குமாறு அரசைத் தூண்டும் வகையில் பௌத்த, இந்துக் கோயில்களில் பூஜைகளை நடாத்தவுள்ளனர்.

கோயில்களில் பூஜைகள் செய்வதற்காக தேங்காய், கற்பூரம், சாம்பிராணி, பூ ஆகியவைகளைத் தந்துதவுமாறு குருநாகல் ஓய்வூதியகாரர் சங்கச்செயலர் எம். பி. குணத்திலக்க சங்கஅங்கத்தினர்களை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார். பூஜைகள் இம் மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

## அரச ஊழியருக்கு 1000ரூபா விசேடபடி வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

மாதாந்தச் சம்பளத்துடன் விசேட படியாக 1000 ரூபா மாதாந்தம் வழங்கும் படியும், குறைந்தபட்ச சம்பளத்தை உறுதிப் படுத்தும் தேசிய சம்பளத் திட்டம் ஒன்றை வகுக்குமாறும் தொழிற் சங்கங்களின் தேசிய இணையம் பிரதம மந்திரி டி. பி. விஜயதுங்காவைக் கேட்டுள்ளது. இவற்றை வரும் வரவு செலவுத் திட்டத்திலிருந்து நடைமுறைப்படுத்தும் படியும் கோரப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம், தந்தி தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், அரச தாதிமார் சங்கம், அரச அளவையாளர் சங்கம், பொது சுகாதார தாதிமார் சங்கம், சிறிலங்கா மகாஜன தோட்டத் தொழிலாளர் சங்கம், சிறிலங்கா சமூக சேவைகள் திணைக்களம் தொழில் முறை போதனாசிரியர் சங்கம், பிரதேச கிராம அபிவிருத்தி வங்கி ஊழியர் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்கள் அங்கத்துவம் வகிக்கும் அமைப்பே இவ்வாறு கோரியுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளரும், மேற்படி இணையத்தின் பொதுச் செயலாளருமான ரீ. ரூஸ்சிறிபாலா வெளியிட்ட அறிக்கையில், கடந்த பத்து வருடங்களாக நீடித்து வரும் பணவீக்கம் தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் கொழும்பு நுகர்வோர் விலைப் புள்ளிகள் தெரியப்படுத்தும் மாதாந்தச் செலவினங்களுக்கு அமைவாக தொழிலாளர் சம்பளம் பெறுவதில்லை என்றும், தொழிலாளர் தமது கஷ்டங்களைச் சமாளிக்க உதவும் வகையில் தற்காலிக உதவிப் படியாக 1000 ரூபா வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.


## விஜிதா அரைக்கும் ஆலை

மிளகாய் மற்றும் அரிசி, குரக்கன், உழுந்து, பயறு போன்ற தானியவகைகள் உடனுக்கு உடன் அரைத்துக் கொடுக்கப்படும்.

உரிமையாளர்

**இ. செல்லத்துரை**

24, விதானையார் வீதி,
(ஈச்சமோட்டை கலட்டிப்புலம் வைரவ கோயிலுக்கு அருகாமையில்)
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(சி.5081)


விழியிருந்த இடத்தில் குழிவிழுந்த பின்னும்
வேழமது தன்னுணர்வை இழக்கவில்லை; மக்கள்
வாழவொரு வழிகாண மறக்கவில்லை !

கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன்

---

## எம் உணர்வுகளில் உன் நினைவுகள்

எங்கள் விடுதலைப் பாதையில்
விழிமூடா
நெடுதூர பயணமதில்
இடை நடுவில்
உறைந்து போன
எம் உயிர்த்தோழனே!

உன் நினைவுகளை
எம் உணர்வுகளில்
மீட்டிக் கொண்டு...
உன் பாதச் சுவடுகளை
ஈழ மண்ணின் வீதியோரங்களிலெல்லாம்
தேடிக்கொண்டு...
என்றும்
எம் செவிப்பறைகளை
முத்தமிடுகின்ற
உன் குரலோசையுடன்
எமது பயணம் தொடர்கிறது.
திலீபா!
உனது பயணம் தொடர்கிறது.

— சுஜோ [சுஜந்தன்]

## நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

**லெஸ்ரர்** (செபஸ்தியாம்பிள்ளை ஜெபநேசன் நெடுங் கண்டல்)

1989ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான சமரில் காயமுற்று, யாழ். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும்போது தேச விரோதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட -

**ராசா** (பாலசுப்பிரமணியம் இரத்தினேஸ்வரன் 48/4, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - புதுக்குடியிருப்புப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்கள், மற்றும் - சிறுவர்கள் உட்பட 19 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாறுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சர்மா** (முத்துலிங்கம் குணசீலன் - 808, கட்சன் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

ஆனையிறவில், சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து யாழ். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். சஞ்சுதா** (சிவனேஸ்வரி இராசையா மாந் தோட்டம் - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5080)

**சிந்தனைக்கு**

புருவத்தின் சுருக்கங்களைவிட, இதயத்தின் சுருக்கங்கள், அழிக்க முடியாதவை.
- மதாம் டாரத்தீ தெலூளி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## தமிழகத்தில் தன்னாட்சிக் கோரிக்கை

கடந்த இரு தினங்களில் (வெள்ளி, சனி) தமிழகத்தில் பதினாறுக்கு மேற்பட்ட தலைவர்களும், 6000 க்கும் மேற்பட்ட தொண்டர்களும் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், தமிழகத்தில் பிரிவினைவாதத்தை ஆதரித்ததாகவும் இவர்கள் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இவர்களின் கைதைத் தொடர்ந்து எழுந்த வன்முறையில் பல பஸ் வண்டிகள் சேதமாக்கப்பட்டன.

இவ்வருட மத்தியில் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பல ஊர்வலங்களும், மறியல் போராட்டங்களும் தமிழகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இப் போராட்டங்களின் போது தலைவர் பிரபாகரனின் படங்களைத் தாங்கிச் செல்லப்படுவதும், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான கோஷங்களும் எழுப்பப்பட்டும்வருகின்றன. இவ்வாறான ஊர்வலங்கள், கூட்டங்கள் யாவற்றிலும் பெரிதாகவும், தமிழக அரசிற்கும், மத்திய அரசிற்கும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையில், தமிழகத்திலுள்ள இருபதிற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த 'தமிழர்களின் வாழ்வுரிமை பற்றிய மாநாடு' ஆகும். இம் மாநாட்டில் முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கும் கலந்து கொண்டமைமேலும்முக்கியத்துவம்வாய்ந்ததாகும்.

இம் மாநாட்டிற்கு தமிழகத்தின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு பேசியவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், தமிழகத்தின் தன்னாட்சி பற்றியும் பேசினர். "முப்பதாண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் எழுந்த பிரிவினைக் கோரிக்கைக்கு வழிவகுத்த அதே காரணிகள் இன்னமும் நிலைத்திருக்கின்றன. எனவே தமிழருடனான விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் அதேபாதையை இந்திய மத்திய அரசும் பின் பற்றுமானால், தமிழ்நாடும் இன்னொரு ஈழமாக மாறும்" என்று முதுபெரும் தமிழறிஞரான கி. ஆ. பெ. விசுவநாதம் இம் மாநாட்டில் எச்சரித்தார்.

தமிழகத்தில் இருந்து இவ்வாறான ஒரு

# விடியலைத் தேடிய தோழன் திலீபன்

தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் அவன் உண்ணாவிரதம் இருந்த நாட்கள் தமிழர் நெஞ்சங்கள் எரிமலை ஆக்கப்பட்ட நாட்களே!

புரட்சியை விதைத்து கண்களை மூடினான் திலீபன். திலீபன் சின்னவயதிலேயே தாயை இழந்தவன். ஆனால் பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தன்தாயகத்தை இழந்திருந்தான்.

1621 ஆம் ஆண்டு சங்கிலி மன்னன் காலத்தில் தமிழீழம் போர்த்துக்கீசரால் கைப்பற்றப்பட்டது. அன்று தொடக்கம் தமிழீழ மக்கள் தமது தாயகத்தின் இறைமையை இழந்தனர் யாழ்ப்பாணத்தின் ஊரெழு என்னும் கிராமத்தில் பிறந்த, திலீபனுக்கு அவன் அன்னையின் இழப்பை விட அன்னை மண்ணின் இழப்பே பெரிதாகத் தோன்றிற்று.

போர்த்துக் கீசனுக்குப் பின் டச்சுக்காரன் அவனைத் தொடர்ந்து ஆங்கிலேயன் பின்னால் சிங்களவன் எத்தனை ஆண்டுகளாக எத்தனை மனிதர்களுக்கு என் மக்கள் அடிமைகளாக? இந்த உணர்வு தான் திலீபன்.

திலீபன் பாசம் மிகுந்தகுடும்பத்தில் பிறந்தவன். நாளை கனிகளோடு குலுங்கும் என்று அவன் தந்தை எதிர்பார்த்த கொழுத்தமாந்தோப்புஅவன். அவன் நன்கு படித்திருந்தான் நுண்ணிய அறிவு மிகுந்தவன் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அவனுக்குஇடம் கிடைத்திருக்கிறது. ஆனால் டாக்டராக வருவதை விட மக்களுக்காகப் போராடவே அவன் விரும்பினான். களத்தில் நின்று போராடி - சிங்கள வெறிப்படையின் குண்டு துளைத்த உடலோடு பல வீரவடுக்களை ஏந்தியவன் திலீபன்

திலீபனின் பள்ளி வாழ்க்கை ஒளி நிறைந்தது லெப். கேணல் பொன்னம்மான், லெப். கேணல் ராதா, மேஜர் கேடில்ஸ் போன்ற மறைந்த மாபெரும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் எந்த யாழ் இந்துக் கல்லூரியில் பயின்றார்களோ அங்குதான் திலீபனும் பயின்றான். படிப்பைப் போலவே விளையாட்டிலும் அவன் புலி. யாழ். மாவட்ட செஸ் விளையாட்டுப் போட்டியில் ஒரு தடவை முதற் பரிசு பெற்றவன். ஓர் ஆசிரியர் திலீபனைப் பற்றி இப்படிக் கூறுகிறார். எனக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது. படிப்பில் திலீபன் முதன்மையானவன். ஒழுக்கம், கட்டுப்பாடும்அவனிடம் நிறைந்து இருந்தது.நான்சந்தித்த மாணவர்களில் திலீபன் வேறுபட்டவன். அவன் ஒரு தனி ஆற்றல் படைத்தவன்.

சிங்கள இனவாத அரசின் கொடுமையைக் கண்டு திலீபன் குமுறினான். பெண்கள் கற்பழிக்கப்படுவதும், குழந்தைகள் உயிரோடு எரிக்கப்படுவதும், தமிழீழத்தில் தொடர் நிகழ்



வுகளாகவே இருக்குமா? விடிவே இல்லையா? பாராளுமன்ற அரசியல் வாதிகள் மேடைகளை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மேடையில் ஓசைகளே நிரம்பி வழிந்தன திலீபன் பாராளுமன்றத்திற்கு வெளியே தமிழர்களின் போராட்டம் தேவை என்பதை உணர்ந்தான் காடுகளிலும், மேடுகளிலும் விடுதலை வேட்கை கொண்டு துப்பாக்கியோடு அலைந்து தமிழீழ மக்களின் ஒப்பற்ற தலைவர் பிரபாகரனை இந்தக்கலாத்தில் தான் அவன் தலைவராக ஏற்றுக் கொண்டான்.

23-07-1983-ல் பதின்மூன்று சிறிலங்காப் படையினரை விடுதலைப்புலிகள் திருநெல்வேலியில் பிணங்களாய் வீழ்த்தினார்கள். சிறிலங்கா அரசு நிலை குலைந்து போயிற்று. வெறிகொண்ட சிங்களப் பேரினவாதிகள் தமிழீழத்தை இரத்தத்தால் குளிப்பாட்ட முனைந்தார்கள் அச்சம் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் தான் திலீபன் குறுகிய ஒற்றையடிப் பாதைகள் வழியாக கிராமங்களைத் தொடர்புகொண்டு விடுதலைப்புலிகள் என்னும் இயக்க விதைகளைத் தூவினான். மிதிவண்டியில் அவன் காற்றாய்ப்பறந்த காலம் அது.

சிறிலங்கா அரசின் புலனாய்வாளர்கள் யாழ்ப்பாணத்தில் நிறைந்து போய் இருந்தார்கள். அடையாளம் தெரியாத எந்த மனிதனும் உளவுத் துறையை சேர்ந்தவனாக இருப்பானோ என்று மக்கள் அஞ்சிய காலம். திலீபன் மாணவர்களையும், உழவர்களையும், தொழிலாளர்களையும் ஓடியோடித் தொடர்பு கொண்டான். தலைமறைவு வாழ்வுக்கு இளைஞர்களை தயார் செய்வது அன்று அவன் மேற்கொண்டிருந்த பணி.

திலீபனின் பேச்சில் அழுத்தம் இருக்கும். கத்தியை பல முறை தீட்டுவது போல ஒன்றையே திரும்பத் திரும்ப சொல்வான். அவன் பேச்சுக்கள் மக்களின் காதில் விழவில்லை. நெஞ்சில் விழுந்தது. அவன் குரல் கேட்ட இடத்திலெல்லாம் மக்கள் நெருப்பாக நின்றார்கள்.

திலீபன் களம் கண்டவன். விடுதலைப் புலிகள் பெற்ற பல வெற்றிகளில் அவனுக்கும் பங்குண்டு. யாழ். மாவட்டத்தில் நடந்த பொலிஸ் நிலையத் தாக்குதலிலும், முகாம்களை விட்டு வெளியே வர முனைந்த சிங்களப்படை வெறியர்களோடு மோதியசண்டைகளிலும் திலீபன் துப்பாக்கியும், கையுமாகவீரஉலா வந்தான். அவன் உடல் எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட நிகழ்வுகள் பல உண்டு.

(தொடரும்)

# உலகத்தமிழரின் ஒப்பற்ற தலைவன் பிரபாகரன்
# உள மகிழ்வோடு சந்திக்கக் காத்திருக்கிறேன்

## புலிகளை ஆதரிப்பது சகோதரக் கடமை
## பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் பிரகடனம்

சத்ரியன்:-ராஜீவின்நினைவு நாளை பயங்கரவாத எதிர்ப்பு நாளாக மத்தியஅரசு அறிவித்துள்ளதே?

ராம்தாஸ்: இவர்கள்சொல்கிற பயங்கரவாதம், தீவிரவாதம் போன்றவை ஏன் எப்படி உருவாகிறது என்பது தான் நம்முடைய கேள்வி.

வயிற்றுக்குச் சோறும், இடுப்புக்குத் துணியும் இல்லாத போது ஏன் நமக்கு இந்த அவலநிலை என்ற சிந்தனை மக்களுக்குள் எழுகிறது.

படித்தவனுக்கு வேலை இல்லை பணம் தருபவனுக்கு மட்டுமே அரசாங்கப் பதவி

சொல்லுவார் இந்த ஜெயலலிதா. சட்டசபையில் நடந்த சம்பவத்தை பத்திரிகையில் எழுதி இருக்கிறார் நிருபர் சுனில்.

அவரை கைது செய்ய வேண்டுமென்று தமிழக சபாநாயகர் போட்ட உத்தரவுக்குத் தடை போட்டு விட்டது சுப்ரீம் கோர்ட்.

டெல்லி போலீசோ, சென்னை போலீசோ இனி கைது

பெரியாருக்கு பாரத ரத்னா விருது கொடுத்து அவரை கௌரவிக்கனும்னு அந்தாளு சொல்லியிருக்கார்.

தமிழ் சமுதாயத்தின் 'புரட்சிக்காரர்' பெரியார் தமிழகத்தில் பிறந்த 'இழிபிறவி' சுப்ரமணியம் சுவாமி பட்டம் பதவிகளால் கவுரவிக்கப்பட வேண்டியவர்களல்ல புரட்சிக்காரர்கள்.

தமிழ்ப் பெண்கள் மாநாட்

இது அமைந்துவிடும். புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனே வாபஸ் வாங்க வேண்டும்.

சத்ரியன்:-புலிகளை ஆதரிக்கும் கட்சிகள் தடை செய்யப்படும். ஆதரித்துப் பேசினால் 7 ஆண்டு சிறையிலடைக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறதே?

ராம்தாஸ்:- 7 ஆண்டுகளென்ன

வேண்டியதில்லை.

புலிகளை ஆதரிக்க வேண்டியது நம் சகோதர கடமை தமிழர்களின் தார்மீக பிறப்புரிமை.

சத்ரியன்:- இந்தியாவில் புலிகளை நேரடியாக ஆதரிக்கும் கட்சி பா. ம. க. தான் அவ்வகையில் பிரபாகரனைச் சந்திக்கும் எண்ணம் உண்டா?

ராம்தாஸ் தமிழ் சமுதாயத்தின் புரட்சியாளர் ஈரோட்டுப் பெரியாரின் இலட்சியக் கனவே உலகில் தமிழனுக்கென்று ஒரு 'தனிநாடு' வேண்டும் என்பதுதான்.

அந்த இலட்சிய உறுதியோடு

திலுள்ள இருபதிற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த 'தமிழர்களின் வாழ்வுரிமை பற்றிய மாநாடு' ஆகும். இம் மாநாட்டில் முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கும் கலந்து கொண்டமைமேலும்முக்கியத்துவம்வாய்ந்ததாகும்.

இம் மாநாட்டிற்கு தமிழகத்தின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு பேசியவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், தமிழகத்தின் தன்னாட்சி பற்றியும் பேசினர். "முப்பதாண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் எழுந்த பிரிவினைக் கோரிக்கைக்கு வழிவகுத்த அதே காரணிகள் இன்னமும் நிலைத்திருக்கின்றன. எனவே தமிழருடனான விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடிக்கும் அதேபாதையை இந்திய மத்திய அரசும் பின் பற்றுமானால், தமிழ்நாடும் இன்னொரு ஈழமாக மாறும்" என்று முதுபெரும் தமிழறிஞரான கி. ஆ. பெ. விசுவநாதம் இம் மாநாட்டில் எச்சரித்தார்.

தமிழகத்தில் இருந்து இவ்வாறான ஒரு கோரிக்கை எழும் என எதிர்பார்க்கப்பட்டதுதான். இது குறித்து பலமான எச்சரிக்கை தமிழக அரசிற்கும், மத்திய அரசிற்கும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டும் இருந்தது. அவை இவற்றைக் கருத்திற் கொண்டதாக இல்லை. இவை தமது ஆட்சி அதிகாரத்தைப் பேணுவதிலேயே அக்கறையாக இருந்தன.

இலங்கைத்தமிழ் மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையில் உள்ளது தொப்புழ் கொடி உறவு. இதனைப் பிரிப்பதென்பது சாத்தியப்பாடான தொன்றல்ல. இந்நிலையில், இலங்கையில் நிகழும் ஒவ்வொரு அம்சமும் தமிழகத்திலும், தமிழகத்தில் நிகழும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை.

இந்நிலையில், அடக்கப்படும் இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஆதரவு பெருகுவதும், அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எழுவதும் சகஜமானதொன்றே அத்தோடு, ஒடுக்கப்படும் தமது சகோதரர்களுக்கு தன்னால் உதவ முடியாது தடைகள் ஏற்படும்போது அதை உடைத்தெறிய முற்படுவதும் தமது சகோதரர்களுக்கு உதவ முற்படுவதும் இயற்கையானதே

இந்நிலையில், தமிழகத்தில் தற்பொழுது எழுந்துள்ள தன்னாட்சிக் கோரிக்கையானது மத்திய, மாநில அரசுகளின் அதிகார ஆசையினாலும், அதிகாரப்போட்டியினாலும் எழுந்தவையேஆகும். இன்று தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான குரல்களும் தன்னாட்சிக் கோரிக்கையும் எழுந்தமைக்கு காரணம் தமது சகோதரர்களுக்கு மாநில, மத்திய அரசுகள் துன்பம் விளைவிக்கின்றன என்பதினாலேயே ஆகும்.

இந்நிலையில், சகோதரர்களுக்கு உதவிசெய்யுமாறு கோரியதைத் தேசத்துரோகம் எனக்கூறுவதும், கைதுசெய்வதும், மாநிலத்திற்குப் பெருமளவு பொலிஸ், இராணுவ பிரிவுகளை வரவழைப்பதும் பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிடப் போவதில்லை. மாறாக, அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க போராட்டங்கள் தீவிரமடைந்ததாகவே வரலாறு உண்டு. அடங்கிப்போனதாக வரலாறு இல்லை. இதனை இந்தியாவின் பஞ்சாப், காஷ்மீர், அஸாம் மாநில அனுபவங்களில் இருந்தே புரிந்து கொள்ளலாம். இந்நிலையில் தமிழகத்தில் கிளம்பி வரும் தன்னாட்சிக்கோரிக்கையையும், இலங்கைத் தமிழர் விவகாரத்தையும் எவ்வாறு இந்திய மத்திய அரசு கையாளப் போகின்றது என்பதிலேயே தென் இந்தியாவின் எதிர்காலம் இருக்கின்றது. இந்திய அரசியல் தலைவர்கள் இதை விளங்கிக் கொள்வார்களா?

# உள மகிழ்வோடு சந்திக்கக் காத்திருக்கிறேன்

## புலிகளை ஆதரிப்பது சகோதரக் கடமை
## பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் பிரகடனம்

**புலிகளை ஆதரிப்பது எம் சகோதரக் கடமை. அது தமிழர்களின் தார்மீக பிறப்புரிமை என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'சத்ரியன்' இதழுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார். 'சத்ரியன்' இதழின் சார்பாக தமிழ்த் தம்பியின் கேள்விகளுக்கு டாக்டர் ராம்தாஸ் பதிலளித்தார். இந்தச் செவ்வியின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

சத்ரியன்:-ராஜீவின்நினைவு நாளை பயங்கரவாத எதிர்ப்பு நாளாக மத்திய அரசு அறிவித்துள்ளதே?

ராம்தாஸ்: இவர்கள்சொல்கிற பயங்கரவாதம், தீவிரவாதம் போன்றவை ஏன் எப்படி உருவாகிறது என்பது தான் நம்முடைய கேள்வி.

வயிற்றுக்குச் சோறும், இடுப்புக்குத் துணியும் இல்லாத போது ஏன் நமக்கு இந்த அவலநிலை என்ற சிந்தனை மக்களுக்குள் எழுகிறது.

படித்தவனுக்கு வேலை இல்லை பணம் தருபவனுக்கு மட்டுமே அரசாங்கப் பதவி தேடிவருகிறது என்பதை கண்கூடாகப் பார்க்கும்போது நெஞ்சுக்குள் நெருப்பு வளர்க்கிறார்கள் இளைஞர்கள்.

சோறும், துணியும் வேலையும் கேட்பவர்கள் ஆட்சியாளர்களுக்குதீவிரவாதிகளாய்த் தெரிகிறார்கள்.

அரசாங்கத்தில் இதற்கான தீர்வே இதுவரை இல்லை பணமும் சாராயமும் கொடுத்து ஓட்டு வாங்கிய ஆட்சியாளர்களுக்கு மக்களைப்பற்றிய பயம் கிடையாது.

தப்பித்தவறி குடிநீர் கேட்டு பெண்கள் சாலை மறியல் செய்தால் குடத்தோடு உட்காரும் பெண்களை தடிகொண்டு அடிக்கிறது போலீஸ்.

இதுதான் ஆட்சியாளர்கள் செய்கிற பயங்கரவாதம்.

சத்ரியன் :- அடுத்தமாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் தாழ்த்தப்பட்டோரை அறிவிக்க வேண்டுமென காங்கிரஸ்காரர்களே கேட்கிறார்களே?

ராம்தாஸ்:-தாழ்த்தப்பட்டோருக்கு தொடர்ந்து துரோகம் செய்து வருகிற கட்சி காங்கிரஸ் காங்கிரசின் தலைமையே பிராமண ஆதிக்கத்தில்தான் உள்ளது

அந்த ஆதிக்க சாதியினர் மாற்றார் ஜனாதிபதியாக விடமாட்டார்கள்.

'கோவண' ஜாதிக்காரன் உள்ளே நுழைந்தால் ஜனாதிபதி மாளிகையில் பூணூல் ஜாதிக்காரர்களின் ராஜ்ஜியம் ஒழிந்து போகுமே.

பிரதமர் பதவியிலிருந்து பெரியார் மண்ணான ஈரோட்டின் கலெக்டர் பதவி வரை 'அவாள்' களே நிரம்பியிருக்கும் போது தாழ்த்தப்பட்டவர் ஜனாதிபதியாவது பகல் கனவே.

சத்ரியன்:- தமிழக சட்ட மன்றம் சுப்ரீம்கோர்ட் உத்தரவை மதிக்காமல் சுப்ரீம் கோர்ட்டுடன் மோதுவது சரியா?

ராம்தாஸ்:- சுப்ரீம் கோர்ட் என்ன ஐ. நா. சபையையே மதிக்க மாட்டேன் என்றுதான் சொல்லுவார் இந்த ஜெயலலிதா. சட்டசபையில் நடந்த சம்பவத்தை பத்திரிகையில் எழுதி இருக்கிறார் நிருபர் சுனில்.

அவரை கைது செய்ய வேண்டுமென்று தமிழக சபாநாயகர் போட்ட உத்தரவுக்குத் தடை போட்டு விட்டது சுப்ரீம் கோர்ட்.

டெல்லி போலீசோ, சென்னை போலீசோ இனி கைது செய்ய முடியாது.

நீயா? நானா? என்று ஆகிவிட்ட இந்நிலையில் அம்மாவின் சொற்படி ஆட்டம் போடும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவும், கோமாளி அ. தி. மு. க. எம். எல். ஏ க்களும், ஜெயலலிதாவும் அடியாட்களுடன் சென்று நிருபரைக் கைதுசெய்து நான்தான் 'சுப்ரீம் பவர்' என்று நிரூபிக்கட்டும்.

சத்ரியன்:- ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியம் சுவாமி பற்றி?

ராம்தாஸ்:-அந்த ஆளு முட்டாள்களிலேயும் சேர்க்க முடியாத அறிவாளிகள் லிஸ்ட்லேயும் சேர்க்கமுடியாத ஒரு ரகம் பெரியாருக்கு பாரத ரத்னா விருது கொடுத்து அவரை கௌரவிக்கனும்னு அந்தாளு சொல்லியிருக்கார்.

தமிழ் சமுதாயத்தின் 'புரட்சிக்காரர்' பெரியார் தமிழகத்தில் பிறந்த 'இழிபிறவி' சுப்ரமணியம் சுவாமி பட்டம் பதவிகளால் கவுரவிக்கப்பட வேண்டியவர்களல்ல புரட்சிக்காரர்கள்.

தமிழ்ப் பெண்கள் மாநாட்டில் பெண்களால் வழங்கப்பட்ட 'பெரியார்' என்ற பட்டமே அவருக்குப் போதுமானது,

பாரத ரத்னா விருதை தேவைப்பட்டால் சுப்ரமணியம் சுவாமி வீட்டின் பசுமாட்டிற்கு(!) கொடுக்க சிபாரிசு செய்து கொள்ளட்டும். பெரியாருக்கு அவசியமில்லை.

சத்ரியன்:- ஆர்.எம். வீரப்பனை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியுள்ளார் ஜெயலலிதா. ஆர்.எம். வீ. அணி பிரிந்து பா.ம.க வுடன் கூட்டணி வைக்கவோ, கட்சியில் சேரவோ விரும்பினால் ஏற்பீர்களா?

ராம்தாஸ்:-பட்டாளி மக்கள் கட்சியில் மனிதர்களை மட்டும்தான்(?) சேர்த்துக் கொள்வோம்

சத்ரியன்:- காவிரி பிரச்சினை மவுனமாகி விட்டதே?

ராம்தாஸ்:-தமிழ் நாட்டுக்கு மத்திய அரசு துரோகம்செய்து விட்ட நிலையில், தமிழக கட்சிகள் அனைத்தும் மக்களை ஒன்று திரட்டிப் போய் தண்ணீரை திறந்துவிட்டு நம் ஜீவாதார உரிமையைப்பெற வேண்டும்.

சத்ரியன்:- தாழ்த்தப்பட்டோர் இயக்கமான மனித உரிமைக்கட்சி இளைய பெருமாள் ஒத்துழைப்புக் கொடுத்தால் பா.ம.க ஏற்குமா?

ராம்தாஸ்:-8 00மணிக்கு ஒரு கட்சி 9.00 மணிக்கு ஒரு கட்சியுடன் பேரம்பேசிவிட்டு,10.00 மணிக்கு இன்னொரு கட்சியுடன் கூட்டணி வைக்கிற பச்சோந்திகளை மக்களும், உண்மைத்தொண்டர்களும் மறந்து வெகுநாளாகிறது.

சத்ரியன்:- தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்திருப்பது சரியா?

ராம்தாஸ்:-தவறு. அவசரப்பட்டு எடுக்கப்பட்ட அர்த்தமற்ற முடிவு ஜெயலலிதாவின் அரசியல் நிர்ப்பந்தத்திற்காக ஈழத் தமிழர்களுக்கு அநீதி இழைத்துவிட்டார்கள். சிங்கள வெறியர்களுக்கு ஆதரவாக இது அமைந்துவிடும். புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனே வாபஸ் வாங்க வேண்டும்.

சத்ரியன்:-புலிகளை ஆதரிக்கும் கட்சிகள் தடை செய்யப்படும். ஆதரித்துப் பேசினால் 7 ஆண்டு சிறையிலடைக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறதே?

ராம்தாஸ்:- 7 ஆண்டுகளென்ன 70ஆண்டுகள்சிறைத்தண்டனை என்றாலும் புலிகளைஆதரிப்போம்.

ஓர் அரசு தன் விருப்பப்படி முடிவுகளை எடுக்கும் போது மக்களும். பிற கட்சிகளும் அதற்கேற்ப கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

தேர்தல் கமிசனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி ஓர் அரசின் முடிவுக்கு உடன்பட வேண்டியதில்லை.

புலிகளை ஆதரிக்க வேண்டியது நம் சகோதர கடமை தமிழர்களின் தார்மீக பிறப்புரிமை.

சத்ரியன்:- இந்தியாவில் புலிகளை நேரடியாக ஆதரிக்கும் கட்சி பா. ம. க. தான் அவ்வகையில் பிரபாகரனைச் சந்திக்கும் எண்ணம் உண்டா?

ராம்தாஸ் தமிழ் சமுதாயத்தின் புரட்சியாளர் ஈரோட்டுப் பெரியாரின் இலட்சியக் கனவே உலகில் தமிழனுக்கென்று ஒரு 'தனிநாடு' வேண்டும் என்பதுதான்.

அந்த இலட்சிய உறுதியோடு ஈழத்தில் போராடிக் கொண்டிருப்பவர்கள் தான் புலிகளும் இலட்சிய வேங்கை' பிரபாகரனும்.

சுதந்திர தமிழீழ மண்ணில் நிச்சயம் சந்திப்பேன் அதற்கு முன் வாய்ப்பிருந்தால் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற மாவீரனை உள மகிழ்வோடு சந்திப்பேன்.

புலிகள் வெல்லட்டும் தமிழீழம் மலரட்டும்:

## சென்னையில் தி.மு.க.வினர் மனிதச்சங்கிலிப் போராட்டம்

(சென்னை)

தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டதை வெளிக்காட்டுவதற்காக இன்று 21 ஆம்திகதி சென்னையில் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெற உள்ளது.

இப் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட வேறும் பல கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. அதே வேளை இப் போராட்டம் குறித்து செய்தியாளரிடம் தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பேசும் போது சட்டப்பேரவையில் ஆஜராவதாக முரசொலி ஆசிரியர் செல்வம் வழங்கிய வாக்குறுதியை காப்பாற்றுவதில் உள்ள அக்கறை இன்மையைக்காட்டுவதாக கூறினார். அத்துடன் தாம் பிறப்பித்த பிடிவிறாந்து இன்னமும் அமுலில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

## ராம்தாஸ் கைதிற்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் தொடர்ந்து கைது செய்யப்படுவதற்கு தி. மு. க தலைவர் மு.கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்

கைது செய்யப்பட்டவர்களில் தொண்ணூறு சதவீதமானோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே கைது செய்யப்பட்டனர் எனவும் திங்களன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுவர் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான பஞ்சாபகேசன் கூறியுள்ளார்.

இதே வேளை இக்கைதுகளை ஆட்சேபித்து ஆங்காங்கே சில வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றது எனவும் ஐந்து டஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டதாகவும், கார்கள் கல்வீச்சுக்கு இலக்கானதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# ஜார்க்கன்ட் கிளர்ச்சி அடக்க மத்திய பொலிஸ் படைவிரைவு

(டில்லி)

ஜார்க்கன்ட் என்னும் தனி மாநிலம் அமைக்க பீகாரில் நடத்தப்படடு வரும் பொருளாதார முற்றுகைப் போரை முறியடிப்பதற்காக மத்திய அரசின் றிசேவ் படையைச் சேர்ந்த பத்து அணிகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன. பீகாரின் தலைநகரான ராஞ்சியிலிருந்து கிடைக்கும் செய்திகளின் படி ஜார்க்கன்ட் மாணவர் சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது என தெரியவருகிறது.

இதனிடையே தனி ஜார்க்கன்ட் மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவு தேடும் முகமாக ராஞ்சியில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தும் ஏற்பாடுகளில் ஜார்க்கன்ட் முக்தி மேரேஷா ஈடுபட்டிருப்பதாக துணைத் தலைவர் சூரஜ் மண்டல் கூறியுள்ளார். இக்கூட்டத்தில் பேசுவதற்கு பாரதீப ஜனதாக் கட்சி, சி பி ஐ சி பி எம். ஜனதா தளம், காங்கிரஸ் கட்சி, ஆகியவற்றின் பிராந்திய தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதுடன் ஜார்க்கன்ட் முக்தி மோர்ஷாவின் (சிபி கோரின் பிரிவு), மற்றும் ஜார்க்கன்ட் மாணவர் சங்கம் ஆகியனவும் அழைக்கப்பட்டுள்ளது

# தடுத்து வைக்கப்பட்ட இளைஞரை மருத்துவ சோதனை செய்யஉத்தரவு

(கொழும்பு)

காரணம் கூறப்படடாது கைதாகி நீதிமன்றிலும் ஆஜர் செய்யப்படாது சித்திரவதைகளுக்கு ஆளானதாக கூறப்படும் மகசீன் சிறைச்சாலை தடுப்புக்காவல் கைதியான கந்தையா விக்கிரமனை சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க பேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் உத்தர விடடுள்ளனர்.

இவரின் விடுதலை வேண்டி பூண்டுலோயா அம்பஹா தென்னந் தோட்டத்தைச் சேர்ந்தசகோதரி நீன்லோகினி ராஜ்மோகன் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஊடாக மனு தாக்கல் செய்திருந்ததை அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது

தாக்கல் செய்யப்பட்ட மனுவில் எருவில் கண்ணகி மகா வித்தியாலய தொண்டர் ஆசிரியரான விக்கிரமன் 04-08-91 இல் நீலாவணையில் உள்ள வீட்டில் வைத்து அதிரடிப் படையினரால் கைதானார். அதிரடிப் பொறுப்பதிகாரி நஷனுகல மற்றும் கோஷ்டியினரால் சித்திரவதைக்கு உள்ளானார்.

தலையில் ஷொப்பிங் பை போடப்படடு பெற்றோலில் மூழ்கடிக்கப்பட்டார். தண்ணீர் தொட்டியிலும் மூழ்கடிக்கப்பட்டார்.

உடலின் அந்தரங்க உறுப்பு உட்பட பலபகுதிகளில் மின்சார அதிர்ச்சிக்கு ஆளானார். மூன்றுமாத காலமாக சலத்துடன் இரத்தம் போகிறது. தலையிலும் வலது முழங்காலிலும் காயம் உண்டான அடையாளம் உள்ளது.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்துவிடுதலை செய்ய வேண்டும் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும். செலவுத் தொகை தரவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்க நீலாவணை அதிரடிப்படை பொறுப்பதிகாரி, பொலிஸ்மா அதிபர். மகசீன் சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதியரசர்கள் பிரதிவாதிகள் பதில் தாக்கல்செய்ய இம்மாதம் 29 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கினர்.

## சிறிலங்கா ராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முயற்சி

சிறிலங்கா இராணுவப் படைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது

கொழும்பு பனாகொடை, அநுராதபுரம், கண்டி, காலி, மாத்தறை, மின்னேரியா, குருநாகல், தியத்தலாவை, அம்பாறை, குருவிட்ட ஆகிய இடங்களிலுள்ள இராணுவப் படைப்பிரிவுத் தலைமையகங்களுக்கு வருமாறு இளைஞர்கள் கோரப்பட்டுள்ளனர்.

## தியத்தலாவை திடீர்வெப்பம்; பரிசோதனைகள் தொடரும்

### பூகற்பவியல் பணிப்பாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தியத்தலாவ நரிமலையில் ஏற்பட்டுள்ள திடீர் வெப்பம் எரிமலைக்கான அறிகுறிஎன்று சொல்வதற்கில்லை. ஆனாலும் இப்புதுவிதமான வெப்பத்திற்கான காரணம் என்னவென்பதை அறிவதற்கு பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று பூகற்பவியல் மதிப்பீட்டு பணிப்பாளர் நிமால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் துப்பாக்கி சுடுதல் சம்பந்தமான பயிற்சிகளும் நடைபெறுவதுண்டு ஆனால் இதுதான் காரணமாக இருக்கலாம் என்றும் திட்டவட்டமாக கூற முடியாது

எம்மிடம் பரிசோதனை கருவிகளும் அதற்கான விஞ்ஞான நிபுணர்களும் உள்ளார்கள் ஆனாலும் இது நமது இலங்கைக்கு புதியது என்ற படியால் பரிசோதனையில் சிறிது தாமத மேற்படுகிறது.

இதனை பரிசோதிக்க நாம் வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனாலும் மிக விரைவில் இப்புதிய வெப்பத்திற்கான உண்மையான காரணம் என்ன என்பதை நாம் கண்டு பிடித்து அறிவிப்போம் என்றும் நிமால்ரணசிங்க தெரிவித்தார்.

## மரநடுகைப் போட்டித்திட்ட

### உதைபந்தாட்டம்

(பருத்தித்துறை)

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் [7பேர் கொண்ட) உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகளை இன்று பருத்தித்துறை திக்க முனை மைதானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா தமிழீழத் தேசியக் கொடியான புலிக்கொடியை ஏற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இவ் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியிலே கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது. இன்று பி ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள காட்சிப்போட்டியில் தமிழீழ கடற்புலிகள் உதைபந்தாட்டக் கோஷ்டியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும் நுழைவுக்கட்டணம் பெரியவர்களுக்கு ரூபா ஐந்து சிறியவர்களுக்கு ரூபா மூன்று [25]

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆறுகணக்காளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆறு கணக்காளர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நிரந்தரநியமனக் கடிதங்களை யாழ். அரச அதிபர் தம்முடன் எடுத்துவந்துள்ளார். மிகவிரைவில் இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (பா)

## ஆண்டு 9 வரலாற்று நூல் இன்று வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை பத்துமணிபஅவில் நடைபெறவுள்ள ஆண்டு 9 வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் அந்நூலை45 ரூபாவுக்குப்பெற்றுக் கொள்ளலாம் இதனை வேலணைக்கோட்டக் கல்வி அதிகாரி சி. புலேந்திரனின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## துப்பாக்கி வேட்டிற்கும் அஞ்சாத யானைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் குடியிருப்பு ... கிறது.

மண்டூர் பகுதியில் காட்டு யானைகளை விரட்டும் நோக்கு ...

## தொண்டர் ஆசிரியர்களுக்கு இம்மாதம் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் 489 பேர் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் பயிலுனர் ஆசிரியர்களாக நியமிககப்பட்டுள்ளதாக பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

31 தை 1989 இற்கு முன் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய அனைவருக்குமே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவருக்குமான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது. இந் நேர்முகப் பரீட்சையின போது மூல ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். யாழ் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நேர்முகப் பரீடசைக் குழுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய தாபன கிளை அலுவலகர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாகம் ஆகியோர் அங்கம் வகிககவுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீடசையைத் தொடர்ந்து இம்மாத இறுதிக்குள் இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன,

இவர்களது நியமனம் தொடர்பாக கல்விப் பணிப்பாளர் விளக்குகையில் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம பெறும் இத் தொண்டர் ஆசிரியர்களுக்கு 1300 ரூபா சம்பளம் வழங்கப்படுமெனவும் இவர்கள் மூன்று ஆண்டுகள் தொலைக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியை பெற்றதும் பயிற்சி ஆசிரியர்களாக கருதப்படுவர் என தெரிவித்தார்

இந் நியமனங்கள் அனைத்தும் 22-2-90 ம் திகதி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்கமைய வழங்கப்பட்டுள்ளது யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு ஆசிரியர்கள் காரணம் அல்ல இத் தாமதத்தால் இவர்கள் சேவை மூப்பை இழக்க நேரிடும் என்பதைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து மற்றைய மாவட்டங்களில் வழங்கப்பட்ட திகதிகளிலேயே இவர்களது சேவைக் காலமும் கணிக்கப்படும் எனவும் இவர்களுக்கான நியமனங்களை முற்திகதி இட்டு வழங்க கல்விச் சேவை ஆணைக் குழு இணக்கம் தெரிவித்துள்ளது இதன்படி இவர்களுக்கு நிலுவைச் சம்பளமும் வழங்கபபடும் என எதிர்பார்க்கபடுகிறது. (ச பா)

## அனுமதி அட்டை அடுத்த மாதம்

க. பொ. த. உயர்தர பௌதிகவியல் பகுதி II மீள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அடுத்த மாத நடுப் பகுதியில் அனுப்பிவைக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை மேற்படி மீள் பரீட்சை முன்னர் விஞ்ஞான பாடங்கள் நடைபெற்ற அதே மண்டபங்களிலேயே நடைபெறும் என யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி பௌதிக மீள்பரீட்சை அடுத்த மாதம் 24 ஆம் திகதி இலங்கை முழுவதும் நடைபெறவுள்ளது தெரிந்ததே. (ச), (பா)

### திருமலை நகருக்கு வெளியே

## கத்தோலிக்க மதகுரு பொலிசாரால் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

நகருக்கு வெளியே உள்ள இராணுவச் சோதனை முகாமில் றோமன் கத்தோலிக்க மதகுரு ஒருவரை பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்தச் சோதனை முகாமில் இராணுவச் சோதனைக்காக வண பீற்றர் டெனிமா தனது வாகனத்தை விட்டுக் கீழே இறங்கியபோது பொலிசார் இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

## தென் பகுதியில் கிரிக்கெட் வட-கிழக்கில் பட்டினி

### திவயின பத்திரிகை விசனம்

தெற்கே மக்கள் கிரிக்கெட் விளையாடும் வேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் என திவயினப் பததிரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. மாதம் 300 ரூபா பெற்ற அகதிகள் இதில் பாதி பெற்றால் எப்படி வாழ்வார்கள். போரைத் தொடங்கியது இவர்கள் இல்லையே என்றும் திவயின கூறியுள்ளது.

''திவயின'', ஐலண்ட் பத்திரிகையின் சகோதர பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டு

யாழ் மத்தியூஸ் வீதியிலுள்ள மனித முன்னேற்ற நடுநிலையத்தில் (கியூடெக்) வைக்கப்பட்டிருந்த இரு சைக்கிள்கள் இரவு நேரம் திருட்டுப் போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

## புலிகளின்

(கொழும்பு)

தியத்தலாவ நரிமலையில் ஏற்பட்டுள்ள திடீர் வெப்பம் எரிமலைக்கான அறிகுறிஎன்று சொல்வதற்கில்லை. ஆனாலும் இப்புதுவிதமான வெப்பத்திற்கான காரணம் என்ன வென்பதை அறிவதற்கு பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று பூகற்பவியல் மதிப்பீட்டு பணிப்பாளர் நிமால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் துப்பாக்கி சுடுதல் சம்பந்தமான பயிற்சிகளும் நடைபெறுவதுண்டு ஆனால் இதுதான் காரணமாக இருக்கலாம் என்றும் திட்டவட்டமாக கூற முடியாது

எம்மிடம் பரிசோதனை கருவிகளும் அதற்கான விஞ்ஞான நிபுணர்களும் உள்ளார்கள் ஆனாலும் இது நமது இலங்கைக்கு புதியது என்ற படியால் பரிசோதனையில் சிறிது தாமத மேற்படுகிறது.

இதனை பரிசோதிக்க நாம் வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனாலும் மிக விரைவில் இப்புதிய வெப்பத்திற்கான உண்மையான காரணம் என்ன என்பதை நாம் கண்டு பிடித்து அறிவிப்போம் என்றும் நிமால்ரணசிங்க தெரிவித்தார்.

ருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதியரசர்கள் பிரதிவாதிகள் பதில் தாக்கல்செய்ய இம்மாதம் 29 ஆம் திகதிவரை அவகாசம் வழங்கினர்.

துள்ளார். மிகவிரைவில் இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (பா)

# ஆண்டு 9 வரலாற்று நூல் இன்று வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் இன்று காலை பத்துமணிபளவில் நடைபெறவுள்ள ஆண்டு 9 வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் அந் நூலை45 ரூபாவுக்குப்பெற்றுக் கொள்ளலாம் இதனை வேலணைக்கோட்டக் கல்வி அதிகாரி சி. புலேந்திரனின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன,

இவர்களது நியமனம் தொடர்பாக கல்விப் பணிப்பாளர் விளக்குகையில் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம பெறும் இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு 1300 ரூபா சம்பளம் வழங்கப்படுமெனவும்

# மரநடுகைப் போட்டித்திட்ட விண்ணப்பதிகதி நீடிப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்; பாடசாலை மாணவர்கள் பாடசாலைகள் என்பவற்றிற்கிடையில் மேற்கொள்ளவிருக்கும் மரநடுகைப் போட்டித் திட்டம் தொடர்பான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டிய முடிவுத்திகதியை 23-9-92 வரை நீடித்துள்ளதாக அறிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொண்ட சகல பாடசாலைகளும் பாடசாலை மாணவர்களும் குறிக்கப்பட்ட திகதிக்கிடையில் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமென தெரிவித்துள்ளது

மேலதிகவிபரங்கள் தேவைப்படினும் மற்றும் ஆலோசனைகள் தரவிரும்பினும்; தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தலைமைச் செயலகம், 83/2, காங்கேசன்துறைவீதி, கொக்குவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

---

பலவந்

கவும், எம் வி. நிச்கோபார் என்னும் பெரிய கப்பல் சென்னைக்கும், திருக்கோணமலைக்கும் இடையே அகதிகளை கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் என்றும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

---

குடியேற்றம்

சண்டை ஆரம்பிக்கப்பட்டதால் குடியேற்றம் நிகழ்த்தப்படவில்லை என்றார். அப்படியானால் மணலாறு பகுதி பற்றி எனத் திருப்பிக்கேட்டபோது அங்கு 1984 ஆம் ஆண்டு முதலே குடியேற்றம் நடத்தப்பட்டு வருவதாகவும், அது தொடர்வதாகவும் குறிப்பிட்டார்.

---

பெறுமதி

தின் நலனுக்காக தனது பிரபல்யத்தைப் பயன்படுத்தத் தயாராக இல்லை,

இந்த நிலையிலேயே போர் நீடிக்கின்றது. மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாயினும் சரி, ஆளும் கட்சியை சார்ந்தவர்களாயினும் சரி மக்கள் அரசியல் வாதிகள் மீது நம்பிக்கையை இழந்து வருகின்றனர் இதன் காரணமாக இந்த தேசத்து மக்கள் தமது அரசியல் தலைமை மீது நம்பிக்கை இழப்பதைக் காண முடிகின்றது. அரசியல் வாதிகளால் தமது பொருளாதார சமூக மற்றும் தளைகளிலிருந்து தம்மை விடுவிக்க முடியாது என்று நம்பும் மக்களின் தொகை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

# துப்பாக்கி வேட்டிற்கும் அஞ்சாத யானைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் குடியிருப்புகளைத் தேடி தண்ணீர் குடிப்பதற்காக வரும் காட்டு யானைகள் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுகளுக்கு அஞ்சாது இருப்பதாகக் கூறப்படுகிறது.

மண்டூர் பகுதியில் காட்டு யானைகளை விரட்டும் நோக்குடன் ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்த போதிலும் காட்டு யானைகள் மிரண்டோடாது மண்டூரில் இருக்கும் புகழ்மிக்க முருகன் ஆலயப் பகுதியில் தரித்து நின்றதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்புப் பகுதியில் நிலவும் கடும் வரட்சி காரணமாகக் காடடுப் பகுதிகளில் குடிநீர்ப் பஞ்சம் நிலவுகின்றமை குறிபபிடத்தக்கது.

---

உணவு

சென்றடைந்து ஈரற்பெரிய குளத்திற்கு அருகேயுள்ள சல்குண்டான் மடு புதிய முகாமில் சோதனையை முடித்த பின்னரே மீண்டும் வடக்கு நோக்கிப் பயணத்தைத் தொடர வேண்டும் என்று சிறிலங்கா இராணுவம் அறிவித்துள்ளது.

இந்த விதி முறையினால் வவுனியா லொறிகள் பதினைந்து மைல் தூரம் மதவாச்சிக்கு சென்று மீண்டும் திரும்பி வரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மதவாச்சி சோதனைச் சாவடியில் லொறிகள் அனைத்தும் ஒரு இரவைக் கழித்த பின்னரே வடபகுதிப் பயணத்திற்கு அனுமதிக்கபடுகின்றன. மேலும்கல்குண்டான் மடு சோதனைச் சாவடிக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை லொறிகளையே படையினர் அனுமதிப்பதால் மதவாச்சியில் பல லொறிகள் காத்துக் கிடக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உழவு இயந்திரங்கள் குடாநாடு செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் முந்நூறுக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள் வவுனியாவில் காத்துக் கிடக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வங்கியாளர் பரீட்சை யாழ். இல் நடைபெறும்

(நமது நிருபர்)

வங்கியாளர் நிறுவனப் பரீட்சைகள் இரண்டு வருடங்களின் பின் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ளன. இப் பரீட்சையை இங்கு நடாத்த நிர்வாக ஆளுனர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இணைந்த நூற்றுக்கு மேற்பட்ட வங்கி அதிகாரிகளுக்கு இப் பரீட்சை 90-ம் ஆண்டின் பின் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை இங்கு நடாத்துவதற்கு சகல வங்கிகளினதும் பிரதான முகாமையாளர்களும் பரீட்சார்த்திகளும் கேட்டதற்கிணங்க கடந்த 18ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 21இல் இங்கு நடத்த இணக்கம் காணப்பட்டதாக கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் இங்கு எடுத்து வரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச, பா)

---

உலகம்

ளுக்குப் பாதுகாப்பு வழங்குவதும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதும் அவசியமாகுமென்று ஐ. நா. அமைப்பின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

---

நிர்ப்பந்தம்

வருவதாகவும், மாதகல் இளவாலை பகுதிகளை கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் நடவடிக்கைகள் முப்பத்தியாறு மணித்தியாலங்களினுள் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

# தென் பகுதியில் கிரிக்கெட் வட-கிழக்கில் பட்டினி

திவயின பத்திரிகை விசனம்

தெற்கே மக்கள் 'கிரிக்கெட் விளையாடும் வேளையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் என திவயினப் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. மாதம் 300 ரூபா பெற்ற அகதிகள் இதில் பாதி பெற்றால் எப்படி வாழ்வார்கள். போரைத் தொடங்கியது இவர்கள் இல்லையே என்றும் திவயின கூறியுள்ளது.

''திவயின'', ஐலண்ட் பத்திரிகையின் சகோதர பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

# தடுப்புமுகாம் கைதிகளை அரச அதிபர் பார்த்தார்

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளை யாழ். அரச அதிபர் நேரில் சென்று சந்தித்தார். மேலும் அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களிடம் இருந்து உறவினர்களுக்கான கடிதங்களையும் பெற்று தம்முடன் எடுத்து வந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

களுத்துறை, மகசீன் சிறைச்சாலைகளில் தற்சமயம்தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப்பட்டியலையும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திடம் இருந்து பெறறு வந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

மேற்படி கைதிகளின் விபரங்கள் நாளை வெளிவரும்.

---

புதிய

போன்றவை பறிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் வன்மையாகக் கண்டிக்கின்றன

இச் சட்டத்திற்கு எதிராக தொழிற்சங்கம் எதிர்கட்சிகள் கூட்டாக பொது கூட்டம் ஒன்று நாளை நுகேகொடையில் நடைபெற உள்ளது.

# கத்தோலிக்க மதகுரு பொலிசாரால்சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

நகருக்கு வெளியே உள்ள இராணுவச் சோதனை முகாமில் றோமன் கத்தோலிக்க மதகுரு ஒருவரை பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்தச் சோதனை முகாமில் இராணுவச் சோதனைக்காக வண பீற்றர் டெனிமா தனது வாகனத்தை விட்டுக் கீழே இறங்கியபோது பொலிசார் இவரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

---

திருட்டு

யாழ் மத்தியூஸ் வீதியிலுள்ள மனித முன்னேற்ற நடுநிலையத்தில் (கியூடெக்) வைக்கப்பட்டிருந்த இருசைக்கிள்கள் இரவு நேரம் திருட்டுப் போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

---

புலிகளின்

பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார்.

கடந்த 17 ஆம் திகதி காலை விடுதலைப் புலிகளினால் இச் சோதனைச் சாவடி இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இத் தாக்குதலின் போது காயமடைநது அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பொறுப்பதிகாரி இறந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது

இத்தாக்குதலின்போது சில இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் பல இராணுவத்தினர் காயமடைந்ததும் தெரிந்ததே. (தி)

---

சதுரங்கம்

பனவற்றுடன் காலாட்படைகளும்பயன்படுத்தப்படும் இராணுவநடவடிக்கையை நினைவுபடுத்தவே சதுரங்கம் எனப் பெயரிடப்பட்டதாகவும் கூறினார். அத்துடன் யாழ்ப்பாண போரில் டாங்கிகள் பயன்படுத்தப்பட ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**20-09-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5739

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
28-6546, 24-5877, 27-1939, 28-1085.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
26-9797, 22-8835, 41-6544, 28-9634, 22-5742, 24-5127
42-9326, 26-6320, 24-5496, 28-2049, 24-6161, 26-5882,
26-6335, 24-883, 25-1047, 28-5039, 28-9927, 24-5414,
41-5417, 43-1019, 42-2997.


# தியாகி திலீபனின் அடிச்சுவட்டில்

கால் பதித்து முன்னேறுவோம்

வர்த்தக ஊழியர் சங்கம் - சுன்னாகம் (3205)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.